Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை	317	உள்ளூர் - 17.11.2026	செவ்வாய்க்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue	317	வெளியூர் - 18.11.2026	புதன்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

கார்த்திகை ராசிபலன் 12 ராசிகளுக்கும்!

ASRB – ICAR – 1393 காலியிடங்கள்!

சொத்து ஆவணங்கள் இனி சுபாவில்!

அடுத்த ஜேம்ஸ் பாண்ட் "ராபர்ட் பேட்டின்சன்"

இந்திய ஐ.டி. நிறுவனங்களுக்கு நெருக்கடி!



புதுடெல்லி, நவ. 17–

வெளிநாட்டு ஊழியர்களைப் பணியமர்த்தும் விதிகளிலும், கிரீன் கார்டுக்கான PERM தொழிலாளர் சான்றளிப்பு நடைமுறையிலும் மாற்றங்களைக் கொண்டுவர டிரம்ப் நிர்வாகம் பரிசீலித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஊழியர்களைப் பணிநீக்கம் செய்த நிறுவனங்கள், அதே பணியில் வெளிநாட்டவர்களை நியமிக்க இரண்டு ஆண்டுகள் தடை விதிப்பது முன்மொழிவுகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. மேலும், வெளிநாட்டு ஊழியர்களைத் தேர்வு செய்வதற்கு முன்பு, பணியிடங்களை குறைந்தது 90 நாட்கள் இணையத்தில் விளம்பரப்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் நோக்கிலான இந்த முன்மொழிவுகள் அமலானால், இந்திய ஐடி நிறுவனங்களின் அமெரிக்கப் பணியாளர் நியமனமும் இந்திய தொழில்நுட்ப ஊழியர்களின் வாய்ப்புகளும் பாதிக்கப்படக்கூடும்.

பிலிப்பைன்ஸின் பழமையான குருத்வாராவில் பிரதமர் மோடி!



பிலிப்பைன்ஸ், நவ. 17–

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் மாநாடு பிலிப்பைன்சிஸின் மணிலா நகரில் நடக்கிறது. இம்மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி மணிலா சென்றடைந்தார். விமான நிலையத்தில் அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நவம்பர் 17 பிலிப்பைன்ஸின் மணிலாவில் உள்ள மிகப் பழமையான குருத்வாராவை பிரதமர் மோடி பார்வையிட்டார். குருத்வாராவின் மறுசீரமைப்புப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவை அவர் முன்னின்று நடத்தினார். இந்த புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

மும்பையில் ஆட்டோ ஓட்டிய வில்லியம்! பயணியாக இளவரசி கேட்!



மும்பை, நவ. 17–

மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பிரிட்டன் இளவரசர் வில்லியம், இளவரசி கேட் ஆகியோர், கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரைச் சந்தித்துப் பேசினர். மும்பையின் பாலார்ட் எஸ்டேட் பகுதியில் மூவரும் நடந்தபடி உரையாடினர். அங்கிருந்த சிறுவர்களுடன் வீதியில் கிரிக்கெட் விளையாடியதுடன், சாலையோரக் கடைகளிலும் உணவருந்தினர்.

நவம்பர் 17ஆம் தேதி வில்லியம் ஆட்டோ ஓட்ட, அதில் கேட் பயணித்ததாக வெளியான வீடியோ சமூக வலைதளங்களில் கவனத்தை ஈர்த்துள்ளது.

நவம்பர் 18ஆம் தேதி டெல்லியில் பிரதமர் மோடியை இருவரும் சந்திக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிசக்தி, போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறைகளில் இந்தியா பிரிட்டன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்க உள்ளனர்.

காதலியுடன் சென்ற உணவகம்! - ராகுல்!



புதுடெல்லி, நவ. 17–

சோனியா காந்தியின் 'பிலாங்கிங்: எ ஜர்னி ஆஃப் லவ்' புத்தக வெளியீட்டு விழாவில், தனது முன்னாள் காதலி தொடர்பான நினைவை ராகுல் காந்தி பகிர்ந்துள்ளார்.

தனது பெற்றோர் ராஜீவ் காந்தியும் சோனியா காந்தியும் முதன்முதலில் சந்தித்த கேம்பிரிட்ஜ் வார்சிட்டி உணவகத்துக்கு, அப்போதைய காதலியை அழைத்துச் சென்றதாக அவர் தெரிவித்தார்.

அங்கு உணவுப் பட்டியலைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, தனது பெற்றோர் அந்த உணவகத்தில்தான் சந்தித்ததாகப் பணியாளரிடம் கூறியதையும் நினைவு கூர்ந்தார். அந்தக் காதலி குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, அவர் தற்போது தனது நண்பர் எனப் புன்னகையுடன் பதிலளித்தார். காதலில் விழ விரும்புவோர் வார்சிட்டி உணவகத்துக்குச் செல்லலாம் என்றும் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

5 ஆண்டுகளுக்குள் துறைத் தேர்வில் தேர்ச்சி கட்டாயம்! கல்வித்துறை பணியாளர்களுக்கு உத்தரவு!!





சென்னை, நவ. 17–

பள்ளிக்கல்வித் துறையில் நியமிக்கப்பட்ட உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள், அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்குள் நிர்ணயிக்கப்பட்ட துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனப் பள்ளிக்கல்வி இயக்குநர் நரேஷ் உத்தரவிட்டுள்ளார்.

டிஎன்பிஎஸ்சி, கருணை அடிப்படை, பணி மாறுதல் உள்ளிட்ட முறைகளில் நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகாண் பருவத்தை, துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்காக அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலவரம்புக்குள் தேர்ச்சி பெறாதவர்களின் தகுதிகாண் பருவத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, பணியிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது. அவர்களைத் தொடர்ந்து பணியில் அனுமதிக்க நியமன அலுவலர்களுக்கு அதிகாரம் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வங்கிகளில் சேவை முடக்கம்!



அமெரிக்கா, நவ. 17–

அமெரிக்காவின் முன்னணி வங்கிகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால், ஆன்லைன் பணப்பரிமாற்றம் மற்றும் சில ஏடிஎம் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாங்க் ஆஃப் அமெரிக்கா, ஜேபி மோர்கன் சேஸ், யு.எஸ். வங்கி, வெல்ஸ் ஃபார்கோ உள்ளிட்ட வங்கிகளின் வாடிக்கையாளர்கள் சேவைகளைப் பயன்படுத்துவதில் சிரமத்தை எதிர்கொண்டனர். டிஜிட்டல் பணப்பரிமாற்றத் தளமான ஜெல்லே சேவையும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. வன்பொருள் கோளாறால் தற்காலிகச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், சைபர் தாக்குதல் தொடர்பான ஆதாரம் இல்லை என்றும் ஜேபி மோர்கன் சேஸ் தெரிவித்துள்ளது.

சில வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், பணம் எடுக்கவும் அவசரப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும் முடியாமல் மக்கள் அவதிக்குள்ளாகினர்.

பட்ஜெட்டில் ஜென் ஸீ குரல்!

இளைஞர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம்; சிறப்பு கலந்துரையாடலுக்கு நிர்மலா திட்டம்!

2027–28 பட்ஜெட் தயாரிப்பில் புதிய அணுகுமுறை!!



புதுடெல்லி, நவ. 17–

2027–28ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் தயாரிப்பில், ஜென் ஸீ தலைமுறை இளைஞர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்க மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதற்காகச் சிறப்பு இளைஞர் கலந்துரையாடல்கள் நடத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் அடுத்தகட்ட பொருளாதார வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அவர்களின் வேலைவாய்ப்பு எதிர்பார்ப்புகள், தொழில் தொடங்குவதற்கான தேவைகள், டிஜிட்டல் பொருளாதாரம் சார்ந்த வாய்ப்புகள் உள்ளிட்டவற்றை நேரடியாக அறிந்துகொள்வதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

இளைஞர்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளைக் கேட்டறிந்து, பட்ஜெட் தயாரிப்பில் அவற்றைக் கருத்தில் கொள்ள நிதியமைச்சகம் விரும்புவதாக, எகனாமிக் டைம்ஸ் செய்தியை மேற்கோள்காட்டி வெளியான தகவல் தெரிவிக்கிறது. இதன்மூலம் பொருளாதாரக் கொள்கைகள் குறித்த விவாதங்களில் இளைய தலைமுறையினருக்கும் கருத்துகளைப் பகிர வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய இளைஞர்களின் பணிச்சூழலும் வருமான வாய்ப்புகளும் வேகமாக மாறிவருகின்றன. ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், படைப்பாற்றல் சார்ந்த தொழில்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் உலகளாவிய வேலைவாய்ப்புகள் ஆகிய துறைகள் அவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இந்த மாற்றங்களுக்கு ஏற்ப பட்ஜெட்டில் அணுகுமுறைகள் இருக்க வேண்டும் என்பதும் இளைஞர்களின் எதிர்பார்ப்பாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாரம்பரிய தொழில் மற்றும் வரிக் கட்டமைப்புகள் தொடர்பான ஆலோசனைகளுடன், டிஜிட்டல் தலைமுறையின் தேவைகளையும் இணைத்துப் பார்க்கும் முயற்சியாக இந்தக் கலந்துரையாடல்கள் அமையும். இளைஞர்களின் அனுபவங்களை நேரடியாகக் கேட்பது, அவர்களின் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்ள உதவும்.

அதேநேரத்தில், கலந்துரையாடல்கள் நடைபெறும் தேதிகள், பங்கேற்பாளர்கள் தேர்வு மற்றும் விவாதிக்கப்படும் தலைப்புகள் பற்றிய விரிவான விவரங்கள் வழங்கப்பட்ட செய்தியில் இடம்பெறவில்லை. இளைஞர்கள் முன்வைக்கும் கருத்துகளில் எவை பட்ஜெட்டில் ஏற்கப்படும் என்பதும் பின்னரே தெரியவரும்.

எனவே, இளைஞர்களுக்கான குறிப்பிட்ட வரிச்சலுகைகள் அல்லது புதிய நிதித்திட்டங்கள் உறுதியாக அறிவிக்கப்படவுள்ளதாக இதனை எடுத்துக்கொள்ள முடியாது. தற்போது வெளியாகியிருப்பது, பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைகளில் அவர்களின் பங்களிப்பை அதிகரிக்கத் திட்டமிடப்படுவதாகக் கூறும் தகவலாகும். அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகும்போது இந்த முயற்சியின் முழு வடிவம் தெளிவாகும்.

வரவிருக்கும் பட்ஜெட், இளைய தலைமுறையின் யோசனைகளையும் பொருளாதார எதிர்பார்ப்புகளையும் எந்த அளவுக்கு பிரதிபலிக்கும் என்ற ஆர்வத்தை இந்தத் தகவல் ஏற்படுத்தியுள்ளது. வேலைவாய்ப்பு முதல் புதிய தொழில் வாய்ப்புகள் வரை, இளைஞர்கள் எதிர்கொள்ளும் மாற்றங்களை பட்ஜெட் விவாதத்தின் மையத்துக்குக் கொண்டுவரும் முயற்சியாக இது பார்க்கப்படுகிறது.

டிரம்ப் அரசு கொண்டு வந்த விசா விதிகளை ரத்து செய்த அமெரிக்க நீதிமன்றம்!



வாஷிங்டன், நவ. 17–

டொனால்டு டிரம்ப் தலைமையிலான அரசு கொண்டுவந்த விசா விதிகளை அமெரிக்க நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

வெளிநாட்டு மாணவர்களுக்கான விசா விதிகளில் பல மாற்றங்களை அமெரிக்க அரசு கொண்டு வந்தது. அதன்படி ஏற்கனவே அமலில் இருந்த நடைமுறையின்படி, எப் 1 விசா எனப்படும் வெளிநாட்டு மாணவர்களுக்கான விசா வைத்திருப்போர், 'டியூரேஷன் ஆப் ஸ்டேட்டஸ்' என்ற சலுகையின் கீழ், அவர்களின் படிப்பு முடியும் வரை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் அமெரிக்காவில் தங்கியிருக்க முடியும்.

ஆனால், டிரம்ப் நிர்வாகம் கொண்டு வந்த புதிய விதிப்படி அமெரிக்காவிற்கு வரும் மாணவர்களுக்கு அதிகபட்சமாக 4 ஆண்டுகள் மட்டுமே எப் 1 விசா அனுமதி வழங்கப்படும். மேலும், படிப்பு முடிந்த பின் தாய்நாடு திரும்புவதற்காக வழங்கப்பட்டு வந்த 60 நாட்கள் அவகாசம், 30 நாட்களாக குறைக்கப்படுகிறது. அதற்கு மேல் தங்க வேண்டியிருந்தால், தனியாக அனுமதி நீட்டிப்பு கோரி விண்ணப்பிக்க வேண்டும். அதேபோல், வெளிநாடுகளை சேர்ந்த பத்திரிகையாளர்கள் அமெரிக்காவில் அதிகபட்சமாக தங்கி இருக்க 5 ஆண்டுகள் வரை அனுமதி வழங்கப்பட்ட நிலையில் புதிய விதிப்படி 240 நாட்கள் (சுமார் 8 மாதங்கள்) மட்டுமே தங்கி இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் நாட்கள் தங்கி இருக்க வேண்டுமானால் அதற்கு அமெரிக்க அரசிடம் அனுமதி பெற வேண்டும்.

குறிப்பாக, சீனாவை சேர்ந்த பத்திரிகையாளர்கள் அமெரிக்காவில் 3 மாதங்கள் மட்டுமே தங்க அனுமதி வழங்கப்படுகிறது. சீன பத்திரிகையாளர்கள் அமெரிக்காவில் கூடுதலாக தங்கி இருக்க வேண்டுமானால் அவர்களுக்கு கூடுதலாக 3 மாதங்கள் தங்க அனுமதி வழங்கப்படும்.

புதிய விசா கட்டுப்பாடுகள் அமெரிக்காவுக்கு புலம்பெயரும் வெளிநாட்டினரின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் டிரம்ப் அரசால் கொண்டு வரப்பட்டது. அதேவேளை, டிரம்ப் அரசின் புதிய விசா விதிகளை எதிர்த்து அமெரிக்காவின் மாசச்சூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கை இன்று விசாரித்த நீதிபதி டேனியல் ஸ்லேயர், வெளிநாட்டு மாணவர்கள், வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் அமெரிக்காவில் தங்கும் காலத்தில் கட்டுப்பாடுகள் விதித்து டிரம்ப் நிர்வாகம் கொண்டு வந்த விசா விதிகளை அதிரடியாக ரத்து செய்தார். மாவட்ட நீதிபதியின் இந்த உத்தரவு டிரம்ப் நிர்வாகத்திற்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. அதேவேளை, இந்த உத்தரவை எதிர்த்து டிரம்ப் நிர்வாகம் மேல்முறையீடு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

செவ்வாய்க்கிழமை 17.11.2026

விசுவாவசு தமிழ் வருடம்

கார்த்திகை மாதம் 01-ம் தேதி

ஆலயத்தில் அரசியல் வேண்டாம்; நிர்வாகத்தில் அறம் வேண்டும்!



ஆலயத்தின் வாசலைக் கடக்கும் மனிதன், தனது துயரங்களை வெளியே விட்டுவிட்டு நம்பிக்கையை உள்ளே எடுத்துச் செல்கிறான். அங்கே அவன் தேடுவது அதிகாரத்தின் முகவரியை அல்ல; அருளின் ஆறுதலை. அந்த நம்பிக்கைக்குரிய இடத்தில் அரசியல் ஆரவாரம் புகுந்துவிட்டால், வழிபாட்டின் அமைதியோடு நிர்வாகத்தின் நம்பகத்தன்மையும் குலைந்துவிடும்.

கோவில்களைப் பாதுகாப்பதும், அவற்றின் சொத்துகளை முறையாக நிர்வகிப்பதும், பக்தர்கள் சிரமமின்றி வழிபட வழிசெய்வதும் அறநிலைய நிர்வாகத்தின் அடிப்படைப் பொறுப்புகள். அந்தப் பொறுப்பின் மையத்தில் இருக்க வேண்டியது இறைப்பணியும் பொதுநலனுமே. அரசியல் செல்வாக்கு, தனிநபர் விருப்பம், வருவாயைப் பெருக்கும் முனைப்பு ஆகியவை அவற்றை மறைத்துவிட அனுமதிக்கக் கூடாது.

அண்மையில் திருச்செந்தூர் சூரசம்ஹார நிகழ்ச்சியின் வர்ணனை தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் இந்த அடிப்படைக் கேள்வியைத்தான் மீண்டும் எழுப்புகின்றன. முருகனுக்குரிய அரோகரா முழக்கத்தில் அரசியல் தலைவர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டதாகவும், இறைவனின் திருவிளையாடல் அரசியல் ஒப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் ஹிந்து ஆலய பாதுகாப்பு இயக்கத்தின் மாநிலப் பொருளாளர் எச். ஆதிசேஷன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் குறிப்பிட்ட நிகழ்வுகள் தொடர்பான முழுமையான பதிவுகளை ஆராய்ந்து உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டியது நிர்வாகத்தின் கடமை. குற்றச்சாட்டை மட்டும் கொண்டு ஒருவரைத் தீர்ப்பிட்டுவிட முடியாது. அதேநேரத்தில், பக்தர்களிடமிருந்து எழும் எதிர்ப்பைக் கேளாமல் கடந்து செல்வதும் பொறுப்பான அணுகுமுறையாகாது. சம்பந்தப்பட்டவர்களின் விளக்கத்தையும் பெற்று, என்ன நடந்தது என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

திருவிழா வர்ணனை என்பது மேடையை நிரப்பும் பேச்சல்ல. அதன் தலவரலாறு, சமய மரபு, நிகழ்ச்சியின் உட்பொருள் ஆகியவற்றைப்பக்தர்களிடம்எடுத்துரைக்கும் பொறுப்புமிக்க பணி. அதற்கான தேர்வு, ஒருவருடைய புகழையோ அரசியல் நெருக்கத்தையோ சார்ந்திருக்கக் கூடாது. சமய அறிவும் மொழியடக்கமும் மரபுணர்வும் அதற்குரிய தகுதிகளாக இருக்க வேண்டும்.

மக்களின் வாக்கால் பதவிக்கு வருபவர்களுக்குக் கோவில் விழாவில் பங்கேற்க உரிமை உண்டு. ஆனால், இறைவனை மையமாகக் கொண்ட நிகழ்ச்சி அவர்களைப் புகழும் அரங்காக மாறுவதற்கு இடமளிக்கக் கூடாது. அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்படும் மரியாதை, வழிபாட்டின் நோக்கத்தை விழுங்கிவிடக் கூடாது. இதை உறுதிசெய்வது அரசுக்கும் கோவில் நிர்வாகத்துக்கும் உரிய பொறுப்பு.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலின் மண்டபப் பயன்பாடு தொடர்பான வழக்கும் நிர்வாகத் தெளிவின் அவசியத்தை உணர்த்துகிறது. பக்தர்கள் தியானம் செய்துவந்த இடத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்பது மனுதாரரின் கோரிக்கை. அது தனியான தியான மண்டபமல்ல; வழிபாட்டுப் பகுதி என்றும், விரும்புவோர் தியானம் செய்ய அனுமதிக்கப்படுவதாகவும் கோவில் தரப்பு தெரிவித்துள்ளது. மண்டபத்தின் தன்மையை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அவகாசம் வழங்கியுள்ள நிலையில், இறுதி முடிவு வந்துவிட்டதுபோல் எந்தத் தரப்பும் பேசுவது பொருத்தமல்ல.

நூற்றுக்கால் மண்டபத்தின் வரலாறு, நடராஜர் வழிபாட்டு மரபு, அங்கு நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்த தனது கருத்துகளை வழக்கறிஞர் ஆதி சைவன் எஸ். சங்கரன் முன்வைத்துள்ளார். இத்தகைய விவகாரங்களில் வரலாற்று ஆவணங்கள், கோவில் பதிவுகள், மரபறிந்த அறிஞர்களின் கருத்துகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்தே முடிவெடுக்க வேண்டும். ஒரு பெயர்ப்பலகையோ, தற்காலிக அனுமதியோ மட்டுமே நிரந்தரமான பயன்பாட்டு வரையறையாகிவிடக் கூடாது.

வழிபாட்டின் அமைதியும் தியானத்தின் அமைதியும் பக்தனின் ஆன்மிக அனுபவத்தில் ஒன்றையொன்று வளப்படுத்தக்கூடியவை. சிக்கல் எழுவது, பொதுவான ஆலய இடத்தின் பயன்பாடு தெளிவின்றி வரையறுக்கப்படும்போதுதான். யாருக்கு அனுமதி, எந்த நிகழ்ச்சிக்கு அனுமதி, என்ன நிபந்தனை என்பவை பதிவுகளிலும் நடைமுறைகளிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும். இன்றைய அலட்சியம் நாளைய வழக்காக மாறாமல் தடுப்பதே நல்ல நிர்வாகம்.

கோவில் நிலங்கள், அறங்காவலர் நியமனங்கள், ஊழியர் தகுதிச் சான்றுகள், தரிசனக் கட்டணங்கள், பிரசாத விலைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் புகார்களுக்கும் இதே அளவுகோல் தேவை. ஒவ்வொரு புகாரும் ஆதாரத்துடன் விசாரிக்கப்பட வேண்டும்; முறைகேடு உறுதியானால் நடவடிக்கையும் வெளிப்படையாக இருக்க வேண்டும். பக்தனிடம் கட்டணம் பெறும் நிர்வாகம், அவனிடம் கணக்குக் கூறுவதிலும் அதே அக்கறையைக் காட்ட வேண்டும்.

முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் முன் நிற்கும் பொறுப்பு இதுவே. புகார்களின் மீது காலவரையறையுடன் விசாரணை, திருவிழா வர்ணனைகளுக்குத் தெளிவான நெறிமுறைகள், அறங்காவலர் மற்றும் பணியாளர் தேர்வுகளில் வெளிப்படைத்தன்மை, கோவில் சொத்துப் பதிவுகளின் முறையான பராமரிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும். தவறு உறுதியானால் பதவியையோ செல்வாக்கையோ பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"முதல்வர் சாட்டையை எடுப்பாரா?" என்ற கேள்விக்கான பதில் ஓர் ஆவேச அறிவிப்பாக இருந்துவிடக் கூடாது. குறையைத் திருத்தும் செயலாகவும், மீண்டும் அது நிகழாதபடி அமைக்கும் நடைமுறையாகவும் இருக்க வேண்டும். அரசுகள் மாறலாம்; அதிகாரிகள் மாறலாம். ஆனால், தலைமுறைகள் காத்துவந்த ஆலய மரபும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையும் ஒவ்வொரு நிர்வாகத்திடமும் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும் பொறுப்புகள். அவற்றில் அலட்சியம் செய்வது ஒரு கட்டடத்தைப் புறக்கணிப்பதற்கு இணையானதல்ல; சமூகத்தின் ஆழமான நம்பிக்கையைப் புண்படுத்துவதாகும்.

ஆலயத்தில் ஒலிக்க வேண்டியது இறைவனின் திருநாமம். அதன் நிர்வாகத்தில் நிலைக்க வேண்டியது அறமும் பொறுப்பும். அந்த இரண்டையும் காப்பதில்தான் அரசின் பெருமை இருக்கிறது!

ஆசிரியர்
மதுரை மணி

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்!



நாமக்கல், நவ. 17–

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 515 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் மதுபாலன் உத்தரவிட்டார்.

மாவட்ட ஆட்சியர் மதுபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா, வங்கிக் கடனுதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் மற்றும் சாலை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மனுக்களைப் பெற்றுக்கொண்டு குறைகளைக் கேட்டறிந்த ஆட்சியர், அவற்றைப் பரிசீலித்து உரிய அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, 5 பேருக்கு புதிய ஸ்மார்ட் ரேஷன் கார்டுகளை வழங்கினார். அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளில் சிறப்பாகச் செயல்பட்ட 16 பணியாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், அண்ணா பிறந்தநாளையொட்டி நடைபெற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மராத்தான் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்ற 100 பேருக்கு மொத்தம் ரூ.1 லட்சத்து 38 ஆயிரத்து 500 பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

திருச்செங்கோடு வட்டம், தேவனாங்குறிச்சியைச் சேர்ந்த சின்னப்பிள்ளையின் வீடு தீ விபத்தில் சேதமடைந்ததையொட்டி, அவருக்கு ரெட்கிராஸ் சார்பில் சமையல் பாத்திரங்கள் அடங்கிய தொகுப்பு, வேட்டி, சேலை, துண்டு, பாய், கொசுவலை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களையும் ஆட்சியர் வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சரவணன் உள்ளிட்ட அரசுத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கம்யூனிஸ்ட் தலைவருக்கு கார்ப்பரேட் வாழ்க்கையா? வெங்கடேசனுக்கு நீதிபதி கேள்வி!

மதுரை, நவ. 17–

'தன்னை ஒரு கம்யூனிஸ்ட் தலைவனாக கூறிக்கொள்ளும் வெங்கடேசன் எம்.பி., ஒரு கார்ப்பரேட் நபர் போல் எப்படி நடந்து கொள்ள முடிகிறது' என, உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வியந்து கூறினார். தாமரை பிரதர்ஸ் மீடியா சார்பில் வெளியிட்ட, 'மகா பெரியவா' புத்தக வெளியீட்டு விழாவில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பேசியதாவது:

கடந்த இரண்டு நாட்களாக அடைந்த வேதனையை வெளியில் சொல்ல முடியாது.2024ல் நீதிபதி மகாதேவனுடன் இணைந்து தீர்ப்பு ஒன்றை வழங்கினேன். நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்முதல் செய்வதில் முறைகேடு நடப்பதாக 2019ல் வழக்கு ஒன்று தொடரப்பட்டது.

அவ்வழக்கின் விசாரணை 2024ல் வந்தது. அப்போது புத்தக கொள்முதலில் இனி மோசடி நடக்காமல் இருக்க பல்வேறு வழிகாட்டுதல்களை தீர்ப்பில் வழங்கியிருந்தேன். தற்போது கோவை ஈ.வெ.ரா., அறிவுலகம் நூலகத்தில் மீண்டும் முறைகேடு நடந்திருக்கிறது என்றால், எனக்கு எவ்வளவு கோபம் வந்திருக்கும்.

அந்த அறிவுலகத்தில் உள்ள அனைத்து ரேக்குகளிலும் அகல்விளக்கு புத்தகங்கள் தான் இருக்கிறது. அந்த பாவம் கழிய, மஹா பெரியவருடைய புத்தகங்களை அடுக்கி வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நீதிபதியின் இந்த பேச்சுக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மதுரை எம்.பி., வெங்கடேசன், தன் சமூக ஊடக பக்கத்தில் 'புத்தக கொள்முதலில் நடந்திருப்பது ஊழல். அது சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும். அது தான் நீதிபதிகளின் வேலை. நடந்திருப்பது பாவம்; அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும் என்று சொல்வது ஜோதிடர்களின் வேலை' என, கிண்டலாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், புத்தக கொள்முதல் முறைகேடு வழக்கு, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கூறியதாவது:



புத்தக வெளியீட்டு விழாவில் ஒரு நகைச்சுவை உணர்விற்காக அப்படி கூறினேன். அதற்கு மதுரை எம்.பி., வெங்கடேசன், என் பணிகளை எப்படி செய்ய வேண்டும் என அறிவுறுத்துவது போல பதிவிட்டிருக்கிறார்.

ஆறு மாதங்களுக்கு முன் சென்னையில் இருந்து மதுரைக்கு பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலில் வந்தேன். ரயில் ஏறுவதற்கு முன், உயர் ரக பென்ஸ் காரில் ஒருவர், 'பிராண்டட்' ஆடை, காலணி அணிந்து வந்திறங்கினார்.

நான், 'கார்ப்பரேட் நபராக இருக்கும்' என, முதலில் நினைத்தேன். அருகில் வந்த பின் தான், 'வெங்கடேசன் சார்... நீங்களா?' என்றேன். அவர், முதல் வகுப்பு 'ஏசி' பெட்டியில் ஏற முயன்றார். நான் வேறொருபுறம் செல்வதை பார்த்து, 'நீதிபதி சார் எங்கு செல்கிறீர்கள்?' என, கேட்டார்.

அதற்கு, 'நான் ஸ்லீப்பர் வகுப்பில் தான் வழக்கமாக பயணிப்பேன். என் இருக்கை எண், எஸ் 3 – 23' என்றேன். ஒரு நீதிபதியாக, நான் எப்படி பணியாற்ற வேண்டும் என, அவர் எனக்கு அறிவுறுத்துகிறார்.

அவர், தன்னை ஒரு கம்யூனிஸ்ட் தலைவனாக கூறிக் கொள்கிறார். ஆனால், பென்ஸ் கார், பிராண்டட் ஆடைகளை அணிகிறார். புத்தகங்கள் எழுதுவதன் மூலம் கிடைக்கும் ராயல்டி தொகையை வைத்து இத்தகைய வாழ்க்கை முறையை தொடர்ந்து நடத்த முடியுமா என, எனக்கு தெரியவில்லை.

எதற்காக இதை கூறுகிறேன் என்றால், இதுபோன்ற முறைகேடு சம்பவங்கள் கவனத்தையும், ஆற்றலையும் திசை திருப்புகிறது.

இவ்வாறு நீதிபதி கூறினார்.

துப்புரவு தொழிலாளர்கள் போராட்டம்!



தாம்பரம், நவ. 17–

தாம்பரம் மாநகராட்சியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வ தில் புதிய நடைமுறையை கொண்டு வர திட்டமிடப்பட்டு ள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து, 5–வது மண்டலத்தில் பணியாற்றும் 500–க்கும் மேற்பட்ட துப்புரவு தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தாம்பரம் மாநகராட்சியில் மொத்தம் 5 மண்டலங்கள் உள்ளன. இந்த மண்டலங்களில் குப்பைகளை அகற்றுதல், சாலைகளை சுத்தம் செய்தல், கழிவுகளை சேகரித்தல் உள்ளிட்ட பல்வேறு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, மாநகராட்சியின் 4 மண்டலங்களில் தனியார் நிறுவனம் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவும், 5–வது மண்டலத்தில் மட்டும் மாநகராட்சி அரசு பணியாளர்கள் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டு ள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 5–வது மண்டலத்தில் தற்போது பணியாற்றி வரும் துப்புரவு தொழிலாளர்களை வேறு மண்டலங்களுக்கு மாற்றும் சூழல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள 5–வது மண்டல துப்புரவு தொழிலாளர்கள், தங்களை வேறு மண்டலங்களுக்கு மாற்றக்கூடாது என்று வலியுறுத்தி வருகின்றனர். இந்த கோரிக்கையை முன்வைத்து 500–க்கும் மேற்பட்ட துப்புரவு தொழிலாளர்கள் பணிக்கு செல்லாமல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தங்களது தற்போதைய பணியிடத்திலேயே தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தாம்பரம் மாநகராட்சியின் 5–வது மண்டலத்தில் அதிக எண்ணிக்கையிலான துப்புரவு தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், அப்பகுதிகளில் வழக்கமாக நடைபெறும் துப்புரவுப் பணிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. குப்பைகள் சேகரித்தல், தெருக்களை சுத்தம் செய்தல் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளில் தொய்வு ஏற்பட வாய்ப்புள்ளதால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடும் என்ற நிலையும் உருவாகியுள்ளது. தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து மாநகராட்சி நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு காண வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழந்தைகள் தினவிழா!



மதுரை, நவ. 17–

மதுரை வடக்குப் பெருமாள் மேஸ்திரி வீதியில் உள்ள காவல் துறை நல்லுறவு மன்றத்தில் மதுரை மாநகர காவல்துறை ஆணையர் ராஜேந்திரன் உத்தரவின்படி திலகர் திடல் காவல் நிலையம் சார்பாக குழந்தைகள் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது விழாவில் திலகர் திடல் சரகம் துணை ஆனையர் பழனிச்சாமி, தலைமையில் ஆய்வாளர் ஜோதிபாசு, உதவி ஆய்வாளர் சந்திராதேவி, சிறப்பு சார்பு ஆய்வாளர் முரளிகண்ணன், தலைமைக்காவலர் வினோத்குமார் காவல்நிலைய எழுத்தர் ராதாகிருஷ்ணன் மற்றும் நல்லுறவுமன்ற ஒருங்கிணைப்பாளர் நித்தியா ஆகியோர் கலந்துகொள்ள அப்பகுதியை சார்ந்த நிலா இலக்கிய மன்றத் தலைவர் கவிக்குயில் கணேசன் கவிதைகள் பாடி சிறப்புறையாற்றிட பகுதி சமூக ஆர்வலர்கள் வடிவேலு, விவேக், சக்திவேலு, முருகன் ஆகியோர் கலந்து கொள்ள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு இனிப்பும் , பரிசுகளும் வழங்கிப் பாராட்டினர்.



கார்த்திகை ராசிபலன்: 12 ராசிகளுக்கும்!



இது பொழுதுபோக்கு நோக்கில் எழுதப்பட்ட பொதுவான ஜோதிடப் பலன்; துல்லியமான கிரகநிலை கணக்கீட்டின் அடிப்படையிலான தனிப்பட்ட கணிப்பு அல்ல.

மேஷம்

திட்டமிட்டுச் செயல்படுவது இந்த மாதம் உதவியாக இருக்கும். பணியில் பொறுப்புகள் அதிகரிக்கலாம்; அவசரமாகப் பதில் அளிப்பதைத் தவிர்க்கவும். குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவது புரிதலை வளர்க்கும். தேவையற்ற செலவுகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துங்கள்.

ரிஷபம்

நிலுவையில் இருக்கும் வேலைகளை முடிக்க முன்னுரிமை கொடுக்கலாம். பணியிடத்தில் உங்கள் கருத்துகளைத் தெளிவாகப் பகிர்வது உதவும். குடும்பச் செலவுகளுக்கு முன்கூட்டியே திட்டமிடுங்கள். உறவுகளில் சிறிய பாராட்டுகளும் அன்பான உரையாடல்களும் மகிழ்ச்சி தரும்.

மிதுனம்

புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் அதிகரிக்கலாம். ஒரே நேரத்தில் பல வேலைகளைத் தொடங்காமல் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுங்கள். நண்பர்களுடனான உரையாடல்கள் புதிய யோசனைகளைத் தரலாம். மாணவர்கள் படிப்புக்கு ஒழுங்கான நேரம் ஒதுக்குவது பயனளிக்கும்.

கடகம்

வீடு, குடும்பம் தொடர்பான விஷயங்களுக்கு அதிக நேரம் தேவைப்படலாம். உணர்ச்சிவசப்பட்டுப் பேசாமல் நிதானமாகக் கருத்துகளைப் பகிருங்கள். பணியில் செய்த முயற்சிகளை முறையாகப் பதிவு செய்து வைத்துக்கொள்ளுங்கள். ஓய்வுக்கும் தனிப்பட்ட விருப்பங்களுக்கும் இடம் கொடுங்கள்.

சிம்மம்

உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். குழுவாகச் செய்யும் பணிகளில் பிறரின் கருத்துகளைக் கேட்பது நல்ல புரிதலை உருவாக்கும். ஆடம்பரச் செலவுகளுக்கு வரம்பு நிர்ணயியுங்கள். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் பேசுவது அமைதியைப் பேணும்.

கன்னி

ஒழுங்குபடுத்துதல், திட்டமிடுதல் போன்றவற்றில் கவனம் செலுத்த ஏற்ற மாதமாகக் கருதலாம். நிலுவைக் கணக்குகள் மற்றும் ஆவணங்களைச் சரிபாருங்கள். எல்லாவற்றிலும் முழுமையை எதிர்பார்ப்பது தேவையற்ற அழுத்தத்தை உருவாக்கலாம். அன்புக்குரியவர்களிடம் உங்கள் பாராட்டுகளை வெளிப்படுத்துங்கள்.

துலாம்

வேலைக்கும் குடும்பத்திற்கும் இடையே நேரத்தைச் சமமாகப் பகிர முயலுங்கள். கூட்டுப் பணிகளில் பொறுப்புகளைத் தெளிவுபடுத்துவது உதவும். பொருட்கள் வாங்கும் முன் அவற்றின் தேவையை ஆராயுங்கள். உறவுகளில் மனதில் இருப்பதை மென்மையாகவும் நேரடியாகவும் பேசுங்கள்.

விருச்சிகம்

தனிப்பட்ட இலக்குகளை மறுபரிசீலனை செய்யும் எண்ணம் வரலாம். பணியில் உங்கள் முயற்சியைத் தொடர்ந்து காட்டுங்கள்; உடனடி பலனை எதிர்பார்த்து அவசரப்பட வேண்டாம். சந்தேகங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் உரியவர்களிடம் தெளிவுபடுத்துங்கள். தனிமையான ஓய்வு நேரம் புத்துணர்ச்சி தரலாம்.

தனுசு

கற்றல், பயணம் அல்லது புதிய முயற்சிகள் மீது ஆர்வம் ஏற்படலாம். எந்தத் திட்டத்திலும் நேரம் மற்றும் செலவை முன்கூட்டியே கணக்கிடுங்கள். உற்சாகத்தில் அதிக வாக்குறுதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும். குடும்பத்துடன் பகிர்ந்து செய்யும் செயல்கள் நெருக்கத்தை அதிகரிக்கும்.

மகரம்

பொறுப்புகள் நிறைந்த மாதமாக உணரலாம். பெரிய வேலைகளைச் சிறிய பகுதிகளாகப் பிரித்துச் செய்வது சுமையைக் குறைக்கும். வரவுசெலவுக் கணக்கைச் சீராகப் பராமரியுங்கள். வேலைக்கு அளிக்கும் முக்கியத்துவத்துடன் உறவுகளுக்கும் நேரம் ஒதுக்குங்கள்.

கும்பம்

புதிய யோசனைகளைச் செயல்படுத்தும் ஆர்வம் தோன்றலாம். அவற்றை முதலில் சிறிய அளவில் முயன்று பார்ப்பது உதவும். நண்பர்கள் மற்றும் சக பணியாளர்களுடன் கருத்துப் பரிமாற்றம் பயனுள்ளதாக இருக்கும். இணையப் பயன்பாட்டுக்கும் நேரடி உறவுகளுக்கும் சமநிலை பேணுங்கள்.

மீனம்

படைப்பாற்றல் சார்ந்த செயல்களில் ஈடுபாடு அதிகரிக்கலாம். பிறருக்கு உதவும்போது உங்கள் நேரம் மற்றும் தேவைகளையும் கருத்தில் கொள்ளுங்கள். பணப் பரிவர்த்தனைகளில் விவரங்களைத் தெளிவாக வைத்திருங்கள். குடும்பத்துடன் அமைதியாகச் செலவிடும் நேரம் மனநிறைவு தரலாம்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், கொப்பனாபட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



நீண்ட நேரம் அமர்ந்து வேலை செய்கிறீர்களா? வால் எலும்பு வலியை அலட்சியப்படுத்தாதீர்கள்!



அலுவலகத்தில் தொடர்ந்து அமர்ந்து வேலை செய்வோர், நீண்ட நேரம் வாகனம் ஓட்டுவோர் ஆகியோருக்கு வால் எலும்பு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. முதுகுத்தண்டின் அடிப்பகுதியில் உள்ள இந்தச் சிறிய எலும்புப் பகுதியில் ஏற்படும் வலி, மருத்துவ ரீதியாக 'காக்சிடைனியா' எனப்படுகிறது.

நீண்ட நேரம் அமர்ந்திருப்பது மட்டுமின்றி, பின்னால் விழுந்து அடிபடுதல், தவறான உட்காரும் முறை, கர்ப்பம் மற்றும் பிரசவத்தின்போது ஏற்படும் அழுத்தம் ஆகியவையும் காரணங்களாக இருக்கலாம். தொடர்ந்து சைக்கிள் ஓட்டுவது, அதிகமான அல்லது மிகவும் குறைவான உடல் எடை போன்றவையும் இந்தப் பகுதியில் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும்.

உட்காரும்போது, அமர்ந்த இடத்திலிருந்து எழும்போது வலி அதிகரிப்பது முக்கிய அறிகுறியாகும். சிலருக்கு மலம் கழிக்கும்போதும் அசௌகரியம் ஏற்படலாம். வலியின் தீவிரத்தைப் பொறுத்து அன்றாடப் பணிகளும் பாதிக்கப்படலாம்.

இதைக் குறைக்க, ஒரே நிலையில் நீண்ட நேரம் அமர்வதைத் தவிர்த்து, அவ்வப்போது எழுந்து நடக்க வேண்டும். முதுகுக்குப் போதுமான ஆதரவுடன் அமர்வதும், வால் எலும்பில் நேரடியாக அழுத்தம் விழாத வகையிலான சிறப்பு குஷனைப் பயன்படுத்துவதும் உதவலாம். வலியை அதிகரிக்கும் செயல்பாடுகளைக் குறைப்பதும் அவசியம்.

மலச்சிக்கலைத் தவிர்க்க நார்ச்சத்துள்ள உணவுகளையும் போதுமான தண்ணீரையும் எடுத்துக்கொள்ளலாம். வலி நிவாரணி மருந்துகளை மருத்துவர் ஆலோசனையுடன் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

வலி சில வாரங்களாக நீடித்தாலோ, அடிக்கடி திரும்பினாலோ, கடுமையாக இருந்தாலோ மருத்துவப் பரிசோதனை அவசியம். காரணத்தைக் கண்டறிந்து உரிய சிகிச்சை பெறுவது முக்கியம்.

குணமடையும் காலம் வலிக்கான காரணத்தைப் பொறுத்து மாறுபடும். லேசான பாதிப்புகள் விரைவில் குறையலாம்; காயம் அல்லது எலும்பு முறிவு இருந்தால் பல வாரங்கள் தேவைப்படலாம். வலியை அதிகரிக்காத மெதுவான நடைப்பயிற்சி சிலருக்கு உதவலாம். சைக்கிள் இருக்கை பொருத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துவதும், வழுக்கும் தரைகளில் கவனமாக நடப்பதும் காயங்களைத் தவிர்க்க உதவும். தொடர்ந்து நீடிக்கும் வலியை வீட்டுப் பராமரிப்பால் மட்டும் சமாளிக்க முயலாமல் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

சினிமா துளிகள்..!

ரவி மோகனின் அரசியல் அதிரடி...!



நடிகர் ரவி மோகன் நடிப்பில் உருவாகியுள்ள 'கராத்தே பாபு' திரைப்படத்திற்கு தணிக்கைக் குழு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'டாடா' படத்தின் மூலம் கவனம் ஈர்த்த இயக்குநர் கணேஷ் கே. பாபு இப்படத்தை இயக்கியுள்ளார். அரசியல் பின்னணியில் அதிரடி மற்றும் திரில்லர் கதையம்சத்துடன் இப்படம் உருவாகியுள்ளது. இதில் ரவி மோகன் அரசியல்வாதியாகவும், கராத்தே மாஸ்டராகவும் இரு பரிமாணங்களில் நடித்துள்ளார். ஷண்முக பாபு என்ற கதாபாத்திரத்தில் அவர் நடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படத்தில் ரவி மோகனுக்கு ஜோடியாக ஆனந்தி நடித்துள்ளார். மேலும், தெளடி ஜிவால், நாசர், கே.எஸ். ரவிகுமார், விடிவி கணேஷ், சக்தி வாசுதேவன், காளி வெங்கட் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சாம் சி.எஸ். இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். ஸ்கிரீன் சீன் மீடியா என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் சுந்தர் ஆறுமுகம் தயாரித்துள்ளார்.

படத்தின் பணிகள் நிறைவடைந்த நிலையில், தணிக்கைக்காக அனுப்பப்பட்டது. அப்போது சில திருத்தங்கள் தொடர்பாக மறுதணிக்கைக் குழுவுக்கு படம் அனுப்பப்பட்டதாகவும், தற்போது மறுதணிக்கைக் குழுவினர் படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் படத்தின் வெளியீட்டுப் பணிகள் அடுத்தகட்டத்தை எட்டியுள்ளன. இப்படம் 2027-ம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்குப் பிறகு திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

கராத்தே பாபு படத்தை தொடர்ந்து பென்ஸ், ப்ரோ கிளப், ஆன் ஆர்டினரி மேன் ஆகிய படங்களை ரவிமோகன் தன் கைவசம் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தவெக கல்வி விருது நிகழ்ச்சி ஒத்திவைப்பு..?




சென்னை, நவ. 17- த.வெ.க. சார்பில் ஒவ்வொரு ஆண்டும் 10, 12-ம் வகுப்பு தேர்வுகளில் மாவட்ட, சட்டசபை தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான முதல் கட்ட கல்வி உதவித்தொகை மற்றும் பரிசளிப்பு விழா கடந்த வாரம் நடந்தது.

தற்போது 2-வது கட்ட பரிசளிப்பு விழா 18-ந்தேதி நீலாங்கரையில் உள்ள தனியார் அரங்கத்தில் நடக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்று மாணவர்களுக்கு பரிசுகளை வழங்குவார் என தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் எந்தெந்த மாவட்டங்களை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்கிறார்கள் என்ற விவர பட்டியல் தயாரிக்கும் பணி நடந்தது.

இந்த நிலையில், சென்னை நீலாங்கரையில் நாளை நடக்கவிருந்த தவெக கல்வி விருது நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கும் அமைச்சர் ஆனந்த் டெல்லியில் உள்ள நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. நிகழ்ச்சிக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபை குளிர்கால தொடர் ரத்து?



சென்னை, நவ. 17- சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. அதன் பின்னர் கடந்த ஆகஸ்டு 5-ந்தேதியன்று திருத்திய பட்ஜெட்டை த.வெ.க. அரசின் நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்தார்.

அதைத்தொடர்ந்து அரசுத் துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது எம்.எல்.ஏ.க்களின் விவாதம், அமைச்சர்களின் பதிலுரை, வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த செப்டம்பர் மாதம் 9-ந்தேதி முடிந்தது.

பொதுவாக ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒருமுறை சட்டசபை கூட்டத்தொடர் நடைபெற வேண்டும். அதன்படி இடைவெளியில் சட்டசபை கூட்டப்பட வேண்டும். கடந்த சட்டசபை கூட்டத்தொடர் முடிந்து 2 மாதங்கள் மட்டுமே ஆகியுள்ளது. வழக்கமாக நவம்பர் அல்லது டிசம்பரில் சட்டசபை கூட்டம் 3 அல்லது 4 நாட்கள் கூட்டப்படுவதுண்டு. அப்போது துணை மானியக்கோரிக்கை தாக்கல் செய்யப்படும்.

ஆனால் சட்டசபை கூடி 2 மாதங்கள் மட்டுமே ஆன நிலையில், துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யவும் வாய்ப்பு இல்லை என்று சட்டசபை வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே குளிர்கால கூட்டத் தொடர் என்று பொதுவாக அழைக்கப்படும் சட்டசபை கூட்டம், இந்த ஆண்டு நடைபெற வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

சபரிமலை பக்தர்களுக்கு குட் நியூஸ்?



சபரிமலை, நவ. 17- சபரிமலை ஐயப்பன் கோயில் மண்டல, மகரவிளக்கு பூஜைக் காலத்தையொட்டி, தமிழக பக்தர்களுக்காக 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நுங்கம்பாக்கம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகம், தமிழக கேரள எல்லையான களியக்காவிளை மற்றும் சபரிமலை சன்னிதானத்தில் இம்மையங்கள் செயல்படுகின்றன. பயணத் தகவல்கள், சந்தேகங்களுக்கான விளக்கங்கள் மற்றும் அவசர உதவிகளை பக்தர்கள் பெறலாம். சென்னை மையத்தை 1800 425 1757 என்ற கட்டணமில்லா எண்ணிலும், களியக்காவிளை மையத்தை 98944 33179, 87606 68834, 94862 70443 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

சபரிமலை தகவல் மையத்தில் அரசு அலுவலர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். யாத்திரைக் காலம் முழுவதும் பக்தர்களுக்கு உதவ அவர்கள் முகாமிட்டிருப்பார்கள். சபரிமலை செல்லும் தமிழக பக்தர்கள் இந்தச் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பக்தர்களின் பயணத்தை எளிதாக்கவும், தேவையான உதவிகளை உடனுக்குடன் வழங்கவும் இந்த மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மின்வாரிய கள உதவியாளர் தேர்வில் முதல் முறையாக 1,472 பெண்கள் தேர்ச்சி!



சென்னை, நவ. 17- தமிழக மின்வாரியத்தில் கள உதவியாளர் பணிக்கான உடல் தகுதி தேர்வில் முதல் முறையாக 1,472 பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழக மின்வாரியத்தில் மின் கம்பம் நடுதல், மின் கம்பங்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்தல் உள்ளிட்ட பணிகளை கள உதவியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், மின்வாரியத்தில் காலியாக உள்ள 1,794 கள உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கடந்த 2025-ம் ஆண்டு செப்டம்பர் 9-ந் தேதி ஆள்சேர்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான எழுத்துத் தேர்வும் நடத்தப்பட்டது.

இதில் தகுதி பெற்ற 5,181 பேருக்கு உடல் தகுதி தேர்வு நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி, மாநிலம் முழுவதும் 13 மையங்களில் கடந்த 11-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை உடல் தகுதி தேர்வுகள் நடைபெற்றன

பெண்களுக்கும் சம வாய்ப்பு வழங்கும் வகையில், மின்கம்பம் ஏறுவதற்காக சிறப்பு காலணிகள் வழங்கப்பட்டன. மேலும், தேர்வு நடைமுறைகள் குறித்து விளக்கும் வீடியோவும் தயாரித்து தேர்வர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த தேர்வில் பங்கேற்ற 2,752 ஆண் தேர்வர்களில் 2,406 பேரும், 2,021 பெண் தேர்வர்களில் 1,472 பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒட்டுமொத்தமாக 3,878 பேர் உடல் தகுதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். ஆண்களில் 87.42 சதவீதம் பேரும், பெண்களில் 72.83 சதவீதம் பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழக மின்வாரிய வரலாற்றில் கள உதவியாளர் உடல் தகுதி தேர்வில் இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான பெண்கள் தேர்ச்சி பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு கடந்த 2010-ம் ஆண்டு கேங்மேன் பணிக்கான தேர்வில் 14 பெண்கள் மட்டுமே உடல் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

உப்பளத் தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணம் ரூ.7,000 ஆக உயர்வு!



சென்னை, நவ. 17- தமிழக உப்பளத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மழைக்கால நிவாரணத் தொகை ரூ.5,000-லிருந்து ரூ.7,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் 23,979 தொழிலாளர் குடும்பங்கள் பயனடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் ஏராளமான குடும்பங்கள் உப்பு உற்பத்தியை நம்பி வாழ்கின்றன. மழைக்காலங்களில் உப்பளங்கள் நீரில் மூழ்குவதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் இழக்கின்றனர். இதனால் அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

இவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் நிவாரணத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், இதற்கான அரசாணை நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

உயர்த்தப்பட்ட நிதியுதவி, வேலை இல்லாத மழைக்காலங்களில் தொழிலாளர் குடும்பங்களின் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பொருளாதாரச் சுமையைக் குறைக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக மாற்று வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ள பகுதிகளில் வசிக்கும் உப்பளத் தொழிலாளர்களுக்கு இந்த நிவாரண உயர்வு பயனளிக்கும் என்றும் வழங்கப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கரூர் ஆத்தூர் கள்ளிபாளையம் கால்நடை மருத்துவமனையில் சமூக நாய்க்களுக்கான இனப்பெருக்க சிகிச்சை மையத்தை கால்நடை துறை அமைச்சர் கமலி ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட ஆட்சி தலைவர் பிரசன்னா ராமசாமி கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் சத்யா கால்நடை மருத்துவர் செந்தில் உள்ளனர்.

இல்லத்தரசிகளுக்கு இன்ப செய்தி!



சென்னை, நவ. 17- சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.560 குறைந்து ரூ.99,760-க்கும், கிராமுக்கு ரூ.70 குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.12,470-க்கும் விற்பனையாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை நீண்ட மாதங்களுக்கு பின் ஒரு லட்சத்திற்கு கீழ் குறைந்துள்ளது. சுமாராக 319 நாட்களுக்கு பிறகு ஒரு சவரன் தங்கம் ஒரு லட்சத்திற்கு கீழ் குறைந்தது.

வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.190-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 90 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வேலை வாய்ப்பு

ASRB – ICAR வேலைவாய்ப்பு 2026

முக்கிய விவரங்கள்

1,393 காலிப்பணியிடங்கள்

தொழில்நுட்ப உதவியாளர் (T-3)	முதுநிலை தொழில்நுட்ப உதவியாளர் (T-4)
1,254 பணியிடங்கள்	139 பணியிடங்கள்

விண்ணப்பம் தொடக்கம்: 18.11.2026
கடைசி நாள்: 17.12.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
பணியிடம்: இந்தியா முழுவதும்
அறிவிப்பு எண்: F. No. 2(2)/2025-Exam
அதிகாரப்பூர்வ இணையதளம்: asrb.gov.in



தகவல் சுருக்கம் • விண்ணப்பிக்கும் முன் அதிகாரப்பூர்வ அறிவிப்பைச் சரிபார்க்கவும்



தமிழக வெற்றிக் கழகம் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ் பாலமுருகன் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு திருப்பூர் மாநகர் மாவட்ட தொண்டரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் செந்தில்குமார் அவர்கள் தலைமையில் மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் SV&Co கலியமூர்த்தி அவர்களின் ஏற்பாட்டில்திருப்பூர் அனுப்பர்பாளையம் ஸ்ரீ கருப்பராயன் ஆலயத்தில் சிறப்பு அபிஷேக அலங்கார பூஜை மற்றும் வேலம்பாளையத்தில் உள்ள திருப்பூர் உதவும் இதயங்கள் இல்லத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது இந்நிகழ்வில் கழக தொண்டரணி நிர்வாகிகள் சங்கர் கார்த்திபன் சரவணமணி.பழனிசாமி சுரேஷ்கிருஷ்ணன் கிருஷ்ணன் ஜெகன் மதன் மற்றும் கழக நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

தவெக மாவட்ட செயலாளர் 50 -வது பிறந்தநாள் விழா!



திருப்பூர், நவ. 17- தமிழக வெற்றிக் கழகத்தின் திருப்பூர் மாவட்ட செயலாளரும் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான பாலமுருகன் அவர்களின் 50 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு நிர்வாகி டாலர் சிட்டி கார்த்திக் அவர்களின் ஏற்பாட்டில் அவர் சட்டமன்றத்தில் முதல் உரை பேசிய புகைப்படத்தினை ஆல்பமாக செய்து அவருக்கு வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் உடன் நிர்வாகி உதயா, சட்டமன்ற உறுப்பினரின் துணைவியார் உடன் இருந்தனர்.



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



தீவிரமடையும் 'அக்வான்' புயல்...!

சென்னை, நவ. 17–

வங்கக்கடலில் உருவான 'அக்வான்' புயல் இன்று தீவிர புயலாக உருவாகக்கூடும். இதனால் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்க டல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து 15–ந்தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. தொடர்ந்து நேற்று காலை 8.30 மணி அளவில் அதே பகுதியில் நிலவியது.

இது திரிகோணமலையில் இருந்து (இலங்கை) சுமார் 640 கி.மீ. கிழக்கு–வடகிழக்கேயும், ஸ்ரீ விஜயபுரத்தில் இருந்து (அந்தமான் தீவு) 670 கி.மீ. மேற்கேயும், சென்னையில் இருந்து 760 கி.மீ. கிழக்கு–தென்கிழக்கேயும், விசாகப்பட்டினத்தில் இருந்து (ஆந்திரா) 870 கி.மீ. தெற்கு–தென்கிழக்கேயும் மற்றும் கோபால்பூரில் இருந்து (ஒடிசா) 980 கி.மீ. தெற்கு–தென்கிழக்கேயும் மையம் கொண்டிருந்தது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வடக்கு – வட மேற்கு திசையில் நகர்ந்து தெற்கு வங்கக்கடலின் மத்திய பகு திகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நேற்று மாலை புயலாக வலுப்பெற்றது. இந்த புயலுக்கு 'அக்வான்' என பெயரிடப்பட்டுள்ளது. இது மேலும் வலுப்பெற்று மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் (செவ்வாய்க்கிழமை) தீவிர புயலாக நிலவக்கூடும்.

இது மேலும் வலுவடைந்து மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, வருகிற 20–ந்தேதி நண்பகலில் நெல்லூர் மற்றும் துனி இடையே ஆந்திர கடற்கரையில் மிக தீவிர புயலாக கடக்க வாய்ப்பு உள்ளது. அப்போது மணிக்கு 120 முதல்



130 கி.மீ. வேகத்திலும், இடையிடையே மணிக்கு 145 கி.மீ. வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும்.

இதேபோல தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு கேரள கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாகவும் இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்க ளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தொடர்ந்து (புதன்கிழமை) மற்றும் நவ. 19 (வியாழக்கிழமை) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். காஞ்சீபுரம், ராணி ப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இட ங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் ஏனைய வட கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

வருகிற 22–ந்தேதி வரை தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து ள்ளது. சென்னையை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான, மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், தென் கிழக்கு வங்கக்கடல், தென் மேற்கு வங்கக்கடல், மத்திய மேற்கு வங்கக்கடல், மத்திய கிழக்கு வங்கக்கடல், ஆந்திர கடலோர பகுதிகளில் 20–ந்தேதி வரை காற்று வேகம் அதிகமாக இருப்பதால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கந்தர் சஷ்டி இலக்கியப் பேருரை!

கந்தர் சஷ்டி இலக்கியப் பேருரை நேற்று மாலை தேவகோட்டை கந்தர் சஷ்டி கழகத்தின் 81 ஆம் ஆண்டு விழா எட்டாம் நாள் சிறப்பு நிகழ்ச்சியில் அழகன் முருகன் என்ற தலைப்பில் 45 நிமிடங்கள் பேருரை ஆற்றிய மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம். அழகன் முருகன் என்ற பாடலை கவியரசு கண்ணதாசன் பஞ்சவர்ணகிளி என்ற திரைப்படத்தில் மிக எளிய நடையில் கொடுத்தார். தனது தந்தையிடம் பழம் வாங்கிட நடந்த திருவிளையாடலில் கூட அறம் சார்ந்து உலகைச் சுற்றி வந்து பழத்தைப் பெற்றுக் கொண்ட பேரழகன் முருகன். எது அழகு : உண்மை, எளிமை, புன்னகை பூத்த முகம், ஞானம், கந்தனின் கருணை இவையெல்லாம் அழகுக்கு அழகு. யாரும் அழைக்கலாம் கந்தா என்று. வெற்றி வீரன், கருணைக் கடல். சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டுகள் முன்பே சொன்னார் நமது பாரத தேசத்தை எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது. நமது மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றி உள்ள மகாபாரதம், ராமாயணம் என்ற இரு பெரும் வாழ்வியல் அறம் இதில் உள்ளது என்று. வாழ்நாள் முழுவதும் முருகப் பெருமானின் திருநாமத்தை கடைக்கோடி மனிதனுக்கும் எளிதாக எடுத்துச் சொன்ன திருமுருக கிருபானந்த வாரியார் அழகன் முருகன் குறித்து அழகிய நடையில் நகைச்சுவை ததும்ப பேசியதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தனது திரைப்பாடல்கள் மற்றும் எழுத்தில் கந்தனின் பெருமைகளை மக்கள் மனதில் பதிய வைத்த கண்ணதாசன். அவர் ஒரு சுயம்பு, தமிழ்க் கடவுள் முருகனின் அழகின் பெருவடிவம், எப்போதும் சிரித்த முகம். மருதமலை மாமணியே முருகையா தேவரின் குலம் காக்கும் வேலையா என்ற பாடல் எந்தக் காலத்திலும் மக்களின் மனதில் பதிந்து நிற்கும். இந்த நாட்களில் விரதம் இருப்பவர்கள் முருகன் அருட்பாடல்களை உச்சரிப்பது அழகின் வடிவம்.

கந்த சஷ்டி கவசத்தில் 61 ஆவது வரியில் உன்திருவடியை உறுதியென்று எண்ணும் என்தலை வைத்து உன் இணையடி காக்க. என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க. பன்னிரு விழியால் பாலகனைக் காக்க. அடியேன் வதனம் அழகுவேல் காக்க என்பதே நமக்குப் பேரானந்தம். திருப்புகழைப் பாடி உந்தன் திருவடியைக் கைதொழுது திருவருளைப் பெற்றிட நான் வந்தேன் முருகா – வேலுண்டு.

மந்திரம் வலிமை என்றார் மகாகவி பாரதி.பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும். நல்லோர் நினைவில் நடனம் புரியும். என்ற வரிகள் பேரழகின் உச்சம் என்றார். ஒரு பெரும் திருவிழாவாக ஒன்பது நாட்கள் பக்தியை முன்வைத்து அன்னைத் தமிழுக்கு அணி சேர்த்திடும் இந்தத் திருப்பணி வாழ்க. இதனை தொடர்ந்து தவமாகச் செய்திடும் தேவகோட்டை நகரத்தார் பெருமக்கள் பணி வணங்குதற்குரியது என்றார்.

மிகச்சிறந்த ஏற்பாடுகளை அதன் பேராற்றல் மிக்க தலைவர் எஸ். எம். அருணாசலம் என்ற குமார், செயலாளர் கே பி. சுவாமிநாதன், இணைச் செயலாளர் லயன் கே. சரவண



நாராயணன், பொருளாளர் ரொட்டேரியன் எம். வெங்கடாசலம் என்ற விசு உள்ளிட்ட பெருமக்கள் செய்திருந்தனர். நிகழ்ச்சியை நேரலையில் மிகச் சிறப்பாக ஒளிபரப்பி வருகின்றனர்.

தினமும் மிகச்சிறந்த பக்திப் பேருரைகள் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகள் எனத் தமிழ்க் கடவுள் திருமுருகன் திருப் பெயரில் நடத்தி வருவது நமது அறப்பணிகளின் நீட்சியாக உள்ளது. வளரும் தலைமுறைக்கு அனைத்து நாட்களிலும் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை பெருமளவில் வாய்ப்பினை வழங்கி வருவது மிகுந்த பாராட்டுக்குரியது. நம்மை ஒருங்கிணைக்கும் பணியை கோவை நகரத்தார்களின் முன்னோடி எம். எம். அசோக்குமார் மற்றும் நாற்பதாண்டுகளாக நம்முடன் பயணப்படும் வாலி இல்லம் ராம. மீனாட்சி சுந்தரம் செய்தனர். நிகழ்ச்சி நிதி உதவி : திருவண்ணாமலை எம். வெங்கடாசலம் கூடுதல் சிறப்பு : செயல்திறன் மிக்க தலைவர் எஸ் எம். அருணாசலம் என்ற குமார், செயலாளர் செயல்வீரர் கேபி. சுவாமிநாதன் என்ற தண்ணீர்மலை, மற்றும் உணவு கவனிப்பு பஞ்சு என்ற நாச்சியப்ப செட்டியார் பணி மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. வாழிய இறைப்பணி வாழிய அன்னைத் தமிழுக்கான அரும்பணி வாழியவே.

சொத்து ஆவணங்கள் இனி தபாலில்!

சென்னை, நவ. 17–

தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட சொத்து ஆவணங்களை மையப்படு த்தப்பட்ட அச்சகத்தில் அச்சிட்டு, தபால் மூலம் வீடுகளுக்கே அனுப்பும் திட்டத்துக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை வெளியிட்டுள்ள அரசாணையின்படி, பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய பிரத்யேக காகிதத்தில் ஆவணங்கள் அச்சிடப்படும். இதற்கான காகி தங்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும்.

அச்சிடப்பட்ட ஆவணங்கள் இந்திய



அஞ்சல் துறையின் ஸ்பீட் போஸ்ட் மூலம் உரிமையாளர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படும். சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் 48 மணி நேரத்திற்குள் விநியோகிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொலைதூர மாவட்டங்களுக்குத் தனியாகக் காலக்கெடு நிர்ணயிக்கப்படும்.

இத்திட்டம் அமலுக்கு வரும்போது, ஆவணங்களைப் பெற சார்பதிவாளர் அலுவ லகங்களுக்கு பொதுமக்கள் நேரில் செல்ல வேண்டிய தேவை குறையும். ஆவணங்களின் அச்சிடுதல், பாதுகாப்பு, விநி யோகம் ஆகிய பணிகள் ஒருங்கி ணைக்கப்படும். சொத்துப் பதிவு நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கில் இந்தப் புதிய வசதிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கு கனிமங்களை கொண்டு செல்ல தடை ரத்து!

சென்னை, நவ. 17–

தமிழகத்தில் இருந்து வெளிமாநிலங்க ளுக்கு கனிமங்களை கொண்டு செல்ல விதிக்கப்பட்ட தடையை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டு ள்ளது. தமிழகத்தில் உள்கட்டமைப்பு, நகரமயமாக்கல் பணிகளுக்கான கருங்கல் மற்றும் ஜல்லிக்கற்கள் போன்ற கட்டுமான பொருள்களின் தடையற்ற வினியோகத்தை உறுதி செய்யவும், செயற்கை விலையேற்றத்தை தடுக்கவும், அவற்றை தமிழ்நாடு சட்ட விரோத கனிமச்சுரங்கம் கனிம போக்குவரத்து மற்றும் சேமிப்பு, தடுப்பு விதிகளில் கடந்த ஜூலை மாதம் திருத்தம் செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில், காரைக்கால், புதுச்சேரி தவிர மற்ற மாநிலங்களுக்கு கருங்கல், ஜல்லிக்கற்களை கொண்டு செல்ல மூன்று மாதங்களுக்குத் தடை



விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரியும், விதிகளை செல்லாது என அறிவிக்கக் கோரியும் மது பிரேமநாதன் உள்ளிட்டோர் சென்னை உயர் நீதிமன்ற த்தில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகளை தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரித்தது.

அப்போது, திருத்த விதிகளுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற வேண்டும். உரிய உரிமம் பெற்று எடுக்கப்பட்ட கனிமங்கள் தங்களுக்கு சொந்தமானது எனவும், அவற்றை எங்கு விற்க வேண்டும் என முடிவெடுக்க மனுதாரருக்கு உரிமை உள்ளதால், மூன்று மாத தடைக்குத் தடை விதிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

மனுதாரர் தரப்பு வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், தமிழ்நாடு சட்ட விரோத கனிமச்சுரங்கம் கனிம போக்குவரத்து மற்றும் சேமிப்பு, தடுப்பு விதிகளில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என அறிவித்து தீர்ப்பளித்தனர்.

மேலும், அந்த விதிகளின் அடிப்படையில் கனிம வளங்களை வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லத் தடை விதிக்க முடியாது எனக் கூறி, தமிழக அரசின் தடையை ரத்து செய்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

உலக அதிசய பட்டியலில் தஞ்சை பெரிய கோவில்?

புதுடெல்லி, நவ. 17–

மத்திய போக்குவரத்து, சுற்றுலா மற்றும் கலாசாரத்துக்கான நாடாளு மன்ற நிலைக்குழு தலைவர் சஞ்சய் குமார் ஜா தலைமையிலான எம். பி.க்கள் குழுவினர் நேற்று தஞ்சாவூர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். அப்போது கல்லணை மற்றும் த ஞ்சாவூர் பெரிய கோவில் உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதைத்தொடர்ந்து பெரிய கோவில் குறித்து சஞ்சய் குமார் ஜா கூறியதாவது:

"தஞ்சாவூர் பெரிய கோவில் இந்தியாவின் ஓர் அதிசயம். இதுவரை வட இந்தியாவில் அமைந்துள்ள தாஜ்மஹாலை மட்டுமே மிகப்பெரிய அதிசயமாக நினைத்திருந்தோம்.



ஆனால், தஞ்சாவூர் பெரிய கோவில் அதைவிட பிரமாண்டமாகவும் சிறப்பா கவும் உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய பிரமாண்டமான கோவிலை உருவாக்கியிருப்பது வியப்பளிக்கிறது. இது நமது நாட்டின் விலைமதிப்பற்ற பொக்கிஷமாகும்.

ஏற்கனவே யுனெஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரிய நினைவுச்சின்ன பட்டியலில் இடம்பெற்றுள்ள பெரிய கோவிலை, உலக அதிசய பட்டியலில் சேர்க்க நாடாளுமன்ற நிலைக்குழு சார்பில் நிச்சயம் பரிந்துரை செய்யப்படும்" என்றார்.

மாமன்னன் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சாவூர் பெரிய கோவில், சோழர்களின் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் கம்பீரமாக காட்சியளிக்கும் இக்கோவில், உலகம் முழுவதும் இருந்து சுற்றுலாப் பயணிகளையும் வரலாற்று ஆர்வலர்களையும் ஈர்த்து வருகிறது. இந்நிலையில், பெரிய கோவிலை உலக அதிசய பட்டியலில் இடம்பெறச் செய்ய பரிந்துரைக்கப்படும் என்ற அறிவிப்பு தமிழர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த ஜேம்ஸ் பாண்ட் "ராபர்ட் பேட்டின்சன்"

"தி பேட்மேன்" (The Batman) மற்றும் "தி ஒடிஸி" (The Odyssey) ஆகிய படங்களில் நடித்த ராபர்ட் பேட்டின்சன், அடுத்த ஜேம்ஸ் பாண்ட் நடிகராக அதிகாரப்பூர்வமாக தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ளார்.

இதன் மூலம், ஆறு தசாப்தங்களுக்கும் மேலான சினிமா வரலாற்றை கொண்ட, கற்பனை கதாபா த்திரமான '007' உளவாளியின் வேட த்தில் நடித்த நடிகர்களின் பட்டியலில் ராபர்ட் பேட்டின்சனும் இணைந்துள்ளார்.

இவருக்கு முன்னதாக டேனியல் கிரெய்க், ஐந்துக்கும் மேற்பட்ட படங்களில் ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். 1962–ல் வெளியான "டாக்டர் நோ" (Dr. No) திரைப்படத்தில் சீன் கானரி முதன்மு தலில் ஜேம்ஸ் பாண்டாக நடித்தார்.

இது குறித்து ராபர்ட் பேட்டின்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சினிமா வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற கதாபாத்திரங்களில் ஒன்று ஜேம்ஸ் பாண்ட். அத்தகைய '007' கதாபாத்தி ரத்தை ஏற்றுக்கொள்வது வாழ்நாளில் கிடைத்த மிகப்பெரிய கௌரவம்.

என் மீது நம்பிக்கை வைத்த டெனிஸ், ஏமி, டேவிட், தான்யா மற்றும் அமேசான் எம்ஜிஎம் ஸ்டுடியோஸ் (Amazon MGM Studios) குழுவினருக்கு நான் மிகுந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த கதாபாத்திரம் எனக்கு கிடைத்த ஒரு கனவு நனவாகும் தருணம் என்று சொல்வது கூட மிக குறைவானதுதான். இந்த அற்புதமான குழுவுடன் இணைந்து பணியாற்றப்போவதை நினைத்து நான் மிகுந்த உற்சாகமடைகிறேன்" என்று கூறியுள்ளார். டெனிஸ் வில்லினியூவ் (Denis Villeneuve) இயக்கத்தில் உருவாகும் அடுத்த ஜேம்ஸ் பாண்ட் படத்தில், யார் அந்த கதாபாத்திரத்தில் நடிக்கப்போகிறார்கள் என்பது குறித்து பல மாதங்களாக நிலவி வந்த ஊகங்க



ளுக்கு, ராபர்ட் பேட்டின் சனின் இந்த அறிவிப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. ராபர்ட் பேட்டின்சனுக்கு இந்த ஆண்டு மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. ஆண்டின் தொடக்கத்தில் "தி டிராமா" (The Drama) படத்தில் நடித்த அவர், தொடர்ந்து கிறிஸ்டோபர் நோலனின் "தி ஒடிஸி" (The Odyssey) மற்றும் "பிரைம் டைம்" (Primetime) ஆகிய படங்களில் வில்லன் கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்து பாராட்டுகளை பெற்றார். இந்த ஆண்டின் இறுதியில், டெனிஸ் வில்லினியூவ் இயக்கத்தில் உருவாகும் "டியூன் – பார்ட் த்ரீ" (Dune: Part Three) திரைப்படத்திலும் அவர் வில்லனாகவே நடிக்கிறார்.

ஸ்மார்ட்போன்களின் விலையை உயர்த்திய சாம்சங்!

புதுடெல்லி, நவ. 17–

இந்தியாவில் சாம்சங் நிறுவனம் தனது 'கேலக்ஸி F' சீரிசில் சில ஸ்மார்ட்போன்களின் விலையை உயர்த்தியுள்ளது. இந்த மாதத்தில் விலை உயர்த்தப்பட்ட சாம்சங் போன்க ளின் பட்டியலில் தற்போது கேலக்ஸி F17 5ஜி மற்றும் கேலக்ஸி F70e 5ஜி ஆகிய மாடல்களும் இணைந்துள்ளன. இந்த இரு மாடல்களின் விலை தலா 2,000 ரூபாய் வரை அதிகரிக்க ப்பட்டுள்ளது. கேலக்ஸி F17 5ஜி–யின் அனைத்து ரேம் (RAM) மற்றும் ஸ்டோரேஜ் கொண்ட மாடல்களின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், கேலக்ஸி F70e 5ஜி–யின் இரண்டு வகைகளின் விலையிலும் உயர்த்தப்பட்டுள்ளது.

சாம்சங் கேலக்ஸி F17 5ஜி–யின் மூன்று மாடல்களும் தலா 2,000 ரூபாய் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.



முன்னதாக 23,499 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 4 ஜிபி ரேம் மற்றும் 128 ஜிபி ஸ்டோரேஜ் கொண்ட மாடல், தற்போது 25,499 ரூபாயாக உயர்ந்துள்ளது.

6ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி ஸ்டோரேஜ் கொண்ட மாடலின் விலை 26,499 ரூபாயில் இருந்து 28,499 ரூபாயாகவும், 8ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி ஸ்டோரேஜ் கொண்ட மாடலின் விலை 29,499 ரூபாயில் இருந்து 31,499 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, கேலக்ஸி F17 5ஜி–யின் ஆரம்ப விலை 25,000 ரூபாயை தாண்டியுள்ளது. இது சாம்சங் நிறுவனத்தின் மிட்–ரேஞ்ச் 'F' சீரிசில் ஒரு விலையுயர்ந்த தேர்வாக மாறியுள்ளது.

டிப்ஸ்டர் சஞ்சு சௌத்ரி பகிர்ந்துள்ள விலை மாற்ற விவரங்களின்படி, கேலக்ஸி F70e 5ஜி–யின் விலையும் அதிகரித்துள்ளது. இதில் 4ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி ஸ்டோரேஜ் கொண்ட மாடலின் விலை 18,499 ரூபாயில் இருந்து 20,499 ரூபாயாக உயர்ந்துள்ளது.

அதேபோல், 6ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி ஸ்டோரேஜ் கொண்ட மாடலின் விலை 21,499 ரூபாயில் இருந்து 23,499 ரூபாயாக, அதாவது 2,000 ரூபாய் அதிகரித்துள்ளது. மெமரி மற்றும் பிற உதிரிபாகங்களின் விலை உயர்ந்து வருவதே இந்த விலை மாற்றங்களுக்குக் காரணமாகும்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020